செ.வெ.எண்:578 நாள்.09-07-2010

ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 600 006.

நாள் 9.7.2010

## பத்திரிக்கைச் செய்தி

2009–2010 ம் ஆண்டிற்கான வெவ்வேறு துறைகளில் உள்ள 6,503 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு மாநில வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையிரிடமிருந்து பெறப்பட்ட 31,188 பணிநாடுநர்களுக்கு மாவட்டங்களில் 12.5.2010 முதல் 15.5.2010 முடிய சான்றிதழ் சரி பார்ப்பு நடத்தப்பட்டது. மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பின் போது பெறப்பட்ட ஆவணங்கள் இவ்வலுவலகத்தால் சரிபார்க்கப்பட்டு, பதிவு மூப்பு, முன்னுரிமை, மற்றும் இனசுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் தகுதி வாய்ந்த பணி நாடுநர்களின் தற்காலிக தெரிவு பட்டியல் (Tentative Provisional Selection List) கீழ்க்கண்ட பாடங்களில் இவ்வாரிய இணைய தளத்தில் இன்று வெளியிடப்படுகிறது. பிற பாடங்களில் தெரிவு செய்யப்பட்டவர் விவரம் விரைவில் வெளியிடப்படும்.

1. கணிதம்
2. இயற்பியல்
3. வேதியியல்
4. தாவரவியல்
5. விலங்கியல்
6. புவியியல்

தெரிவு செய்யப்பட்ட பணிநாடுநர்களுக்கு தெரிவு ஆணை ( Tentative Provisional Selection Order) தனித்தனியே அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாரிய இணையதள முகவரி: **www.trb.tn.nic.in**

தலைவர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.